**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**திருப்புவனம்**
**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 02–ம் தேதி**
**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் –16ம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –392/2019**
**CNR No: TNSV15–001493–2019**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக சார்பு ஆய்வாளர், திருப்பாச்சேத்தி காவல்நிலையம் அதன் குற்ற எண்.110/2013 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | 1.தனுஷ்கோடி., த/பெ.ராமன், வைகை மீனாட்சிபுரம், திருப்பாச்சேத்தி.<br>2.வெள்ளையம்மாள்,(இறப்பு) க/பெ.ராமன், வைகை மீனாட்சிபுரம், திருப்பாச்சேத்தி. |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 323, 324, 506(ii)ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழ்<br>2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழ்<br>2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 02.05.2013 (2ம் எதிரி) |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 30.11.2013 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 12.11.2014 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி 24.05.2017, கு.வி: 18.08.2022<br>அ.சா.2: மு.வி 24.05.2017 கு.வி:18.08.2022<br>அ.சா.3: மு.வி 24.05.2017 கு.வி: 18.08.2022<br>அ.சா.4: மு.வி 17.01.2018 கு.வி: இல்லை<br>அ.சா.5: மு.வி 17.01.2018 கு.வி: இல்லை<br>அ.சா.6: மு.வி 06.08.2018 கு.வி: 06.08.2018<br>அ.சா.7: மு.வி 22.10.2020 கு.வி: இல்லை<br>அ.சா.8: மு.வி 17.12.2021 கு.வி: 17.12.2021<br>அ.சா.9: மு.வி 17.12.2021 கு.வி: 17.12.2021 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 16.03.2026 |
| தீர்வு | முடிவாக, 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 324, 506(ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் 1ம் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:03:49 +0530

| | |
|---|---|
| | தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மானாமதுரையில் CC.No.116/2014 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் பின் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.392/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கு இன்று 16.03.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.சுரேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கில் 02.05.2013ம் தேதி 10.00 மணிக்கு வைகை மீனாட்சிபுரம் வெள்ளாளமேட்டில் வாதி எதிரிகளின் நிலத்தில் நின்று கொண்டு புளியம்பழம் உலுப்பியதற்காக தகராறு செய்தும், வாதியை எதிரிகள் வழிமறித்து 1வது எதிரி வாதியின் வலது கையில் மண் வெட்டியால் வெட்டியும், தடுக்க வந்த சாட்சி2 ஐ இடது கை கட்டை விரலில் கடித்தும், தடுக்க வந்த சாட்சி3 ஐ 2வது எதிரி கையால் அடித்து சிறிய தன்மையுள்ள காயங்களை ஏற்படுத்தியும் மேலும் 1, 2 எதிரிகள் கொலைமிரட்டல் செய்த குற்றத்திற்காக 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழும் குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:03:54 +0530

3) இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரிகள் அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார்கள். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரிகள் மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள்.

5) இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் 2ம் எதிரி இறந்துவிட்ட படியால் 2ம் எதிரிக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

7.1) அ.சா.1 துரைக்கண்ணு தனது சாட்சியத்தில், தான் தற்போது வைகைமீனாட்சி புரத்தில் குடியிருந்து வருவதாகவும், விவசாய வேலை செய்து வருவதாகவும், எதிரிகளை தெரியும் என்றும், எதிரிகளுக்கும் தனக்கும் புளியம்பழம் உலுப்புவது சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், அதையொட்டி கடந்த 02.05.2013ம் தேதி புளியம்பழம் உலுப்புவதற்காக தான் தனது அக்கா பூமாதேவியும் தனது அக்கா மகன் கோடீஸ்வரனும் தங்கள் காலாங்கரையில் உள்ள தங்களுக்கு சொந்தமான தோப்பில் புளியம்பழம் உலுப்புதற்காக சென்றோம் என்றும், புளியமரம் இருக்கும் கீழ்பகுதியில் எதிரிகளுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றும், அவ்வாறு தாங்கள் உலுப்பும் பழங்கள் எதிரிகளின் இடத்தில் விழுந்ததால் அதை தாங்கள் எடுக்க கூடாது என்று எதிரிகள் தங்களுடன் தகராறு செய்தார்கள் என்றும், அப்போது காலை 10 மணியிருக்கும் தான் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தேன் என்றும், அப்போது 1 வது எதிரி தனுஸ்கோடி தனது வலதுகையின் முழங்கைக்குமேல் மண்வெட்டியால் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:04:00 +0530

தனது அக்கா மகன் கோடீஸ்வரன் விலக்கவிட வந்தார் என்றும், 1வது எதிரி தனது அக்கா மகனின் இடது கை கட்டைவிரலில் கடித்தார் அதனால் அவருக்கு ரத்தக்காயம் எற்பட்டது என்றும், 2வது எதிரி வெள்ளையம்மாள் தனது அக்காவின் வலது காதை பிடித்து இழுத்ததால் காது பியந்து தோடு காணமால் போய்விட்டது என்றும், சம்பவத்தை பார்த்த தங்கப்பா அவருடைய வீட்டிலிருந்தும் மற்றும் தண்டபாணி வயலிலிருந்தும் இருந்து பார்த்து வந்து விலக்கிவிட்டார்கள் என்றும், போகும்போது உன்னை மண்வெட்டியால் வெட்டாமல் விடமாட்டேன் என்று 1வது எதிரி தனுஸ்கோடி மிரட்டல் விடுத்தார் என்றும், அதன்பிறகு தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், அந்த புகார் தான் கொடுத்தது தான், இது தொடர்பாக போலீசார் தன்னை விசாரித்தராகள் என்றும், அதன்பிறகு தனது அக்கா மகன் கோடீஸ்வரன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் தானும் தனது அக்காவும் திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) அ.சா.2 கோடீஸ்வரன் தனது சாட்சியத்தில், தான் தற்போது வைகைமீனாட்சி புரத்தில் குடியிருந்து வருகிறதாகவும், தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறதாகவும், அசா–1துரைக்கண்ணு தனது மாமா ஆவார் என்றும், எதிரிகளை தெரியும் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுவதில் பிரச்சனை இருந்தது என்றும், கடந்த 02.05.2013ம் தேதி வெல்லாலமேடு அருகில் உள்ள தங்களுக்கு சொந்தமான காலாங்கரை அருகில் உள்ள தங்களுக்கு சொந்தமான புளியமரத்தில் பழம் உழுப்புவதற்காக தானும் தனது அம்மா பூமாதேவி அ.சா–1 ஆகியோர்கள் சென்றதாகவும், அந்த மரத்தில் பழம் விழும் பாதி பகுதி எதிரிகளுக்கு சொந்தமானதாகும் என்றும், அப்போது எதிரிகள் சுமார் 9.30 மணியளவில் வந்து தங்கள் இடத்தில் புளியம்பழம் எடுக்ககூடாது என்று வாக்குவாதம் செய்தார்கள் என்றும், 1வது எதிரி தனது மாமாவை மண்வெட்டியால் வெட்டிவிட்டார் என்றும், அப்போது சண்டையைவிலக்க போன தன்னை 1வது எதிரி கட்டைவிரிலில் கடித்துவிட்டார் என்றும், 2வது எதிரி தனது அம்மா பூமாதேவியின் வலது காதை பிடித்து இழுத்ததால் அவரது காது பிய்நது அவரது தோடு காணாமல் போய்விட்டது என்றும், சத்தம்கேட்டு வந்த தங்கப்பா தங்கபாண்டி இருவரும் சண்டையை விலக்கிவிட்டாாகள் என்றும், 1வது எதிரி போகும்போது மண்வெட்டியால் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், தாங்கள் பயந்துகொண்டு காவல் நிலையம் வந்தோம் என்றும், இது சம்பந்தமாக

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:08 +0530

அ.த.சா.ஆ.1 புகார்கொடுத்தார் என்றும், அதன்பிறகு தான் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், தனது அம்மாவும், மாமாவும் திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.3) அ.சா.3 பூமாதேவி தனது சாட்சியத்தில், தான் தற்போது வைகைமீனாட்சி புரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறதாகவும், அ.சா–1, 2 தனது தம்பி மற்றும் தனது மகன் ஆவார்கள் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுவது இருந்து வந்தது என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் தேதி மாதம் ஞாபகமில்லை. பிரச்சனை இருந்து வந்தது வல்லாலமேடு கால்வாய்கரையில் உள்ள தங்களுக்கு சொந்தமான புளியமரத்தில் பழம் உழுப்ப சென்றபோது உழுப்பிய பழங்கள் எதிரிகளின் இடத்தில் விழுந்ததால் அவர்கள் எடுக்க கூடாது என்று வாக்குவாதம் செய்தார்கள் என்றும், 1வது எதிரி அப்போது மண்வெட்டியல் அ.சா–1ன் வலது முழங்கைக்கு மேல்வெட்டி ரத்தக்காயத்தையும் விலக்க வந்த கோடீஸ்வரனை இடது கை கட்டை விரலில் கடித்துவிட்டார் என்றும், 2வது எதிரி வெள்ளையம்மாள் தனது வலது காதை பிடித்து இழுத்ததால் தனது காது பிய்ந்து தோடு காணமால்போய்விட்டது என்றும், சண்டையை பார்த்த தங்கப்பா, தண்டாணி ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், 1வது எதிரி போகும் போது உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டல் விடுத்தார் என்றும், உடனே தாங்கள் காவல்நிலையம் சென்றோம் என்றும், இது சம்பந்தமாக அ.சா–1 புகார் கொடுத்தார் என்றும், அதன்பிறகு தனது மகன் கோடீஸ்வரன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் தானும் தனது தம்பியும் திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.4) அ.சா.4 தண்டபாணி தனது சாட்சியத்தில், தான் ஏமீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறதாகவும், விவசாய வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 துரைக்கண்ணுவை தெரியும் என்றும், 05.03.2013ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் தான் தனது பசுமாடுகளை பிடித்துக்கொண்டு தனது வீட்டிலிருந்து தனது வயலுக்கு ராமசாமித்தேவர் தென்னந்தோப்பு வழியாக சென்றுகொண்டிருந்ததாகவும், அதற்கு கிழக்கு பக்கமாக சண்டை போடும் சத்தம்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:04:13 +0530

கேட்டதாகவும், தான் போகும் போது தனுஷ்கோடிக்கும், துரைக்கண்ணுக்கும் தள்ளு முள்ளு ஏற்பட்டு கைகலப்பாகிக்கொண்டிருந்தது என்றும், அதில் தனுஷ்கோடிக்கு தலையின் வலது பக்கத்தில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்துகொண்டிருந்ததாகவும், துரைக்கண்ணுக்கு லேசாக முதுகில் கீறல் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும், இருவரும் தனக்கு உறவினர்கள் என்றும், தான் விலக்கிவிட்டேன் என்றும், யார் எதைக்கொண்டு தாக்கினார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும், போலீசார் இதுசம்பந்தமாக விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.5)அ.சா.5 காளை (எ) மணிகண்டன் தனது சாட்சியத்தில், தான் ஏ.மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறதாகவும், படமாத்தூரில் வேலை செய்து வருகிறதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1, 2, 3 ஆகியோரை தெரியும் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், அழைப்பாணையில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சாட்சி ஜெயக்கண்ணுவை தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், ஆனால் தன்னிடம் எதுவும் கையெழுத்து பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.6) அ.சா.6 ஜெயக்கண்ணு தனது சாட்சியத்தில், தான் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறதாகவும், தான் விவசாயத்துறையில் அரசு பணி செய்து தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளதாகவும், அ.சா.5 ஐ தெரியும் என்றும், தேதி நினைவில்லை என்றும், கடந்த 2013ம் வருடம் 5ம் மாதம் மதியம் 12 மணியளவில் இடைக்காட்டுர் செல்லும் சாலையில் நின்றுகொண்டிருந்தபோது சார்பு ஆய்வாளர் அங்கு வந்து தனுஸ்கோடி, வெள்ளையம்மாள், துரைக்கண்ணு சண்டையிட்ட சம்பவம் தொடர்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும் காளை என்ற மணிகண்டனும் கையொப்பம் செய்தோம் என்றும், அதில் தாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.7) அ.சா.7 தங்கப்பா தனது சாட்சியத்தில், தான் வைகை மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறதாகவும், தான் ஓட்டுநர் தொழில் செய்து வருகிறதாகவும், எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 துரைக்கண்ணுவை தெரியும் என்றும், இவ்வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தான் நேரில் எதையும் பார்க்கவில்லை என்றும், இதுதொடர்பாக போலீஸார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:04:18 +0530

7.8) அ.சா.8 ஜீவரத்தினம் மருத்துவர் தனது சாட்சியத்தில், தான் மானாமதுரை அரசு தலைமை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறதாகவும், தற்போது மானாமதுரை அரசு மருத்துவமனையில் கடந்த 02.05.2013ஆம் தேதி உதவி மருத்துவராக பணியில் இருந்த போது மாலை 3.54 மணிக்கு திருப்பாச்சேத்தி போலீசாரால் அனுப்பப்பட்ட கோடீஸ்வரன் த/பெ .மணிஅம்பலம் என்பவரை கீழ்க்கண்ட காயங்களுக்காக பரிசோதனை செய்தேன் என்றும், அவரை 02.05.2013ஆம் தேதி அவரது ஊரில் உள்ள வல்லாளமேடு என்ற இடத்தில் வைத்து இரண்டு அடையளாம் தெரிந்த நபர்களில் ஒருவர் கம்பாலும், மற்றவர் பல்லால் கடித்து காயப்படுத்தியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும், 1x1 செமீ அளவுள்ள வீக்ககாயம் வலது முன்கையின் மேல்பகுதியில் இருந்தது. என்றும், 2) 1x1 செமீ அளவுள்ள வீக்ககாயம் இடது முன்கையில் இருந்தது என்றும், 3) 1/2x1/2 செமீ அளவுள்ள சிராயப்பு காயம் வலது கட்டை விரலின் உள்பகுதியில் இருந்தது என்றும் மற்றும் 1/2x1/2 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் அதே விரலின் வெளிப்புறத்தில் இருந்தது என்றும், அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியதாகவும், தான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ.3 என்றும், மேற் சொன்ன சம்பவத்தில் மேற்சொன்ன விதத்தில் தாக்கினால் மேற் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும், இது தொடர்பாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7.9) அ.சா.9 செந்தில்குமார் காவல் சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் திருப்பாச்சேத்தி காவல்நிலையத்தில் 2013ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 02.05.2013 ஆம் தேதி துரைக்கண்ணு என்பவர் 11.15 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 110/2013 சட்டப்பிரிவுகள் 341, 323, 324, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ. 4 என்றும், இந்த வழக்கின் அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு இவ்வழக்கை தனதுவிசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயக்கண்ணு, காளை என்ற மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அதசாஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அதசாஆ. 6 என்றும், இவ்வழக்கின் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகளான

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:25 +0530

தண்டபாணி, தங்கப்பா, சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பார்வை மகஜர் சாட்சிகளான ஜெயக்கண்ணு, காளை என்ற மணிகண்டன் ஆகியோர்களை அன்றைய தினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான வெள்ளையம்மாளை அதே தேதியில் 14.30 மணியளவில் தூதை விலக்கு ரோட்டில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட துரைக்கண்ணுவிற்கு சிகிச்சை அளித்த மானாமதுரை அரசு மருத்துவர் ஜீவரத்தினம் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்றதாகவும், இவ்வழக்கின் 1வது எதிரியான தனுஷ்கோடி முன்பிணை பெற்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை என்றும், பின்பு இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 30.11.2013 அன்று 1ம் எதிரி் தனுஷ்கோடி மீது 341, 324, 506(2) இதச வின் கீழும், 2வது எதிரி வெள்ளையம்மாள் மீது 341, 323, 506(2) இதச வின் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

8)அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

9) இவ்வழக்கு எதிரிகள் மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

10) **தீர்வு–**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் 02.05.2013ம் தேதி 10.00 மணிக்கு வைகை மீனாட்சிபுரம் வெள்ளாளமேட்டில் வாதி எதிரிகளின் நிலத்தில் நின்று கொண்டு புளியம்பழம் உலுப்பியதற்காக தகராறு செய்தும், வாதியை எதிரிகள் வழிமறித்து 1வது எதிரி வாதியின் வலது கையில் மண் வெட்டியால் வெட்டியும், தடுக்க வந்த சாட்சி2 ஐ இடது கை கட்டை விரலில் கடித்தும், தடுக்க வந்த சாட்சி3 ஐ 2வது எதிரி கையால் அடித்து சிறிய தன்மையுள்ள காயங்களை ஏற்படுத்தியும் மேலும் 1, 2 எதிரிகள் கொலைமிரட்டல் செய்த குற்றத்திற்காக 1ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 324, 506(ii)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 323, 506(ii)ன் கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு,

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:04:29 +0530

அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்துள்ளனர்.

11) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார். 1ம் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் எதிரி தான் இந்த குற்றச்சம்பவத்தை செய்தார்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே 1ம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார்.

12) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 துரைக்கண்ணு தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2013ம் தேதி புளியம்பழம் உழுப்புவதற்காக தான் தனது அக்கா பூமாதேவியும் தனது அக்கா மகன் கோடீஸ்வரனும் தங்கள் காலாங்கரையில் உள்ள தங்களுக்கு சொந்தமான தோப்பில் புளியம்பழம் உழுப்புதற்காக சென்றோம் என்றும், புளியமரம் இருக்கும் கீழ்பகுதியில் எதிரிகளுக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றும், அவ்வாறு தாங்கள் உழுப்பும் பழங்கள் எதிரிகளின் இடத்தில் விழுந்ததால் அதை தாங்கள் எடுக்க கூடாது என்று எதிரிகள் தங்களுடன் தகராறு செய்தார்கள் என்றும், அப்போது காலை 10 மணியிருக்கும் தான் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தேன் என்றும், அப்போது 1 வது எதிரி தனுஸ்கோடி தனது வலதுகையின் முழங்கைக்குமேல் மண்வெட்டியால் வெட்டி காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அப்போது தனது அக்கா மகன் கோடீஸ்வரன் விலக்கவிட வந்தார் என்றும், 1வது எதிரி தனது அக்காமகனின் இடது கை கட்டைவிரலில் கடித்தார் அதனால் அவருக்கு ரத்தக்காயம் எற்பட்டது என்றும், 2வது எதிரி வெள்ளையம்மாள் தனது அக்காவின் வலது காதை பிடித்து இழுத்ததால் காது பியந்து தோடு காணமால் போய்விட்டது என்றும், சம்பவத்தை பார்த்த தங்கப்பா அவருடைய வீட்டிலிருந்தும் மற்றும் தண்டபாணி வயலிலிருந்தும் இருந்து பார்த்து வந்து விலக்கிவிட்டார்கள் என்றும், உன்னை மண்வெட்டியால் வெட்டாமல் விடமாட்டேன் என்று 1வது எதிரி தனுஸ்கோடி மிரட்டல் விடுத்தார் என்றும், அதன்பிறகு தான் காவல் நிலையம் சென்று புகார்கொடுத்தேன் போகும்போது அந்த புகார் தான் கொடுத்தது தான் என்றும் இது தொடர்பாக போலீசார் தன்னை விசாரித்தராகள் என்றும், அதன்பிறகு தனது அக்கா மகன் கோடீஸ்வரன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:04:35 +0530

எடுத்துக்கொண்டார் தானும் தனது அக்காவும் திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைஎடுத்துக்கொண்டோம் என்றும், என்று தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில், பின்னீடு எதிரிகள் தரப்பில் சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த போது, தான் இதற்கு முன்பு போலீசார் சொன்னதன் பேரில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், எனக்கு ஏற்பட்ட காயம் எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்டதல்ல என்றால் சரிதான் என்றும், எதிரிகள் யாரும் என்னை வழிமறிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரிகள் என்னை கொலைமிரட்டல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், தான் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் என்றும், போலீசார் தன்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றும், வழக்கில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும், தனது முதல் விசாரணையிலிருந்து மாறுபட்டு, முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது மட்டுமல்லாமல் அ.சா.1ன் சாட்சியம் நம்பும்படியாகவும், அரசு தரப்பிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 கோடீஸ்வரன் தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2013ம் தேதி வெல்லாலமேடு காலாங்கரை அருகில் உள்ள தங்களுக்கு சொந்தமான புளியமரத்தில் பழம் உலுப்புவதற்காக தானும் தனது அம்மா பூமாதேவி அ.சா–1 ஆகியோர்கள் சென்றதாகவும், அந்த மரத்தில் பழம் விழும் பாதி பகுதி எதிரிகளுக்கு சொந்தமானதாகும் என்றும், அப்போது எதிரிகள் சுமார் 9.30 மணியளவில் வந்து புளியம்பழம் எடுக்ககூடாது என்று வாக்குவாதம் செய்தார்கள் என்றும், 1வது எதிரி தனது மாமாவை மண்வெட்டியால் வெட்டிவிட்டார் என்றும், அப்போது சண்டையைவிலக்க போன தன்னை 1வது எதிரி கட்டைவிரலில் கடித்துவிட்டார் என்றும், 2வது எதிரி தனது அம்மா பூமாதேவியின் வலது காதை பிடித்து இழுத்ததால் அவரது காது பிய்ந்து அவரது தோடு காணாமல் போய்விட்டது என்றும், சத்தம்கேட்டு வந்த தங்கப்பா தங்கபாண்டி இருவரும் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், 1வது எதிரி போகும்போது மண்வெட்டியால் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், தாங்கள் பயந்துகொண்டு காவல் நிலையம் வந்தோம் என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார் அதன்பிறகு தான் மானாமதுரை அரசு

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:40 +0530

மருத்துவமனையில் மாமாவும் எனது சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், தனது திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், பின்னீடு எதிரிகள் தரப்பில் சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த போது, தான் இதற்கு முன்பு முதல் விசாரணையில் போலீசார் சொன்னதன் பேரில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், எனக்கோ, அ.சா.1க்கும், அ.சா.3க்கும் ஏற்பட்ட காயம் எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்ட காயம் அல்ல என்றும், எதிரிகள் யாரும் எங்களை வழிமறிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும், தனது முதல் விசாரணையிலிருந்து மாறுபட்டு, முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது மட்டுமல்லாமல் அ.சா.2ன் சாட்சியம் நம்பும்படியாகவும், அரசு தரபப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 பூமாதேவி தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் தேதி மாதம் ஞாபகமில்லை என்றும், எதிரி பாய்ச்சுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றும், வல்லாலமேடு கால்வாய்கரையில் உள்ள தங்களுக்கு சொந்தமான புளியமரத்தில் பழம் உழுப்ப சென்றபோது உழுப்பிய பழங்கள் எதிரிகளின் இடத்தில் விழுந்ததால் அவர்கள் எடுக்ககூடாது என்று வாக்குவாதம் செய்தார்கள் என்றும், 1வது எதிரி அப்போது மண்வெட்டியல் அ.சா–1ன் வலது முழங்கைக்கு மேல்வெட்டி ரத்தக்காயத்தையும் விலக்க வந்த கோடீஸ்வரனை இடது கை கட்டை விரலில் கடித்துவிட்டார் என்றும், 2வது எதிரி வெள்ளையம்மாள் தனது வலது காதை பிடித்து இழுத்ததால் தனது காது பிய்ந்து தோடு காணமால்போய்விட்டது என்றும், சண்டையை பார்த்த தங்கப்பா, தண்டாணி ஆகியோர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், 1வது எதிரி போகும் போது உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று மிரட்டல் விடுத்தார் என்றும், உடனே தாங்கள் காவல்நிலையம் சென்றோம் என்றும், இது சம்பந்தமாக அ.சா–1 புகார் கொடுத்தார் என்றும், அதன்பிறகு தனது மகன் கோடீஸ்வரன் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும், தானும் தனது தம்பியும்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:45 +0530

திருப்பாச்சேத்தியில் உள்ள இராமேஸ்வரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், பின்னீடு எதிரிகள் தரப்பில் சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்த போது, நான் இதற்கு முன்பு முதல் விசாரணையில் போலீசார் சொன்னதன் பேரில் தான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான் என்றும், எதிரிகள் யாரும் எங்களை வழிமறிக்கவில்லை என்றால் சரிதான் என்றும், எனக்கோ, அ.சா.1க்கும், அ.சா.2க்கும் ஏற்பட்ட காயம் எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்டதல்ல என்றால் சரிதான் என்றும், எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும், தனது முதல் விசாரணையிலிருந்து மாறுபட்டு, முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது மட்டுமல்லாமல் அ.சா.3ன் சாட்சியம் நம்பும்படியாகவும், அரசு தரப்பிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.4 தண்டபாணி தனது சாட்சியத்தில், 05.03.2013ம் தேதி சுமார் காலை 10.00 மணியளவில் தான் தனது பசுமாடுகளை பிடித்துக்கொண்டு தனது வீட்டிலிருந்து தனது வயலுக்கு ராமசாமித்தேவர் தென்னந்தோப்பு வழியாக சென்றுகொண்டிருந்ததாகவும், அதற்கு கிழக்கு பக்கமாக சண்டை போடும் சத்தம் கேட்டதாகவும், தான் போகும் போது தனுஷ்கோடிக்கும், துரைக்கண்ணுக்கும் தள்ளு முள்ளு ஏற்பட்டு கைகலப்பாகிக்கொண்டிருந்தது என்றும், அதில் தனுஷ்கோடிக்கு தலையின் வலது பக்கத்தில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்துகொண்டிருந்ததாகவும், துரைக்கண்ணுக்கு லேசாக முதுகில் கீறல் ஏற்பட்டு ரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும், இருவரும் தனக்கு உறவினர்கள் என்றும், தான் விலக்கிவிட்டேன் என்றும், யார் எதைக்கொண்டு தாக்கினார்கள் என்ற விபரம் தனக்கு தெரியாது என்று தனது 161 வாக்குமூலத்திற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக எதிரிகள் தாக்கிய விதம் குறித்து பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.4ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:50 +0530

16) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.5 காளை (எ) மணிகண்டன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், அழைப்பாணையில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சாட்சி ஜெயக்கண்ணுவை தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், ஆனால் தன்னிடம் எதுவும் கையெழுத்து பெறவில்லை என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.5ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17) இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.6 ஜெயக்கண்ணு தனது சாட்சியத்தில், தேதி நினைவில்லை என்றும், கடந்த 2013ம் வருடம் 5ம் மாதம் மதியம் 12 மணியளவில் இடைக்காட்டுர் செல்லும் சாலையில் நின்றுகொண்டிருந்தபோது சார்பு ஆய்வாளர் அங்கு வந்து தனுஸ்கோடி, வெள்ளையம்மாள், துரைக்கண்ணு சண்டையிட்ட சம்பவம் தொடர்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும் காளை என்ற மணிகண்டனும் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில், எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்தை தான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல என்றும், எதிரிக்கும் தனக்கும் சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு நடந்து வந்தது என்றும், அதை மனதில் வைத்துக்கொண்டு போலீசாருக்கு ஆதரவாக பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.7 தங்கப்பா தனது சாட்சியத்தில், அ.சா.1 துரைக்கண்ணுவை தெரியும் என்றும், இவ்வழக்கு சம்பவம் பற்றி தனக்கு தெரியாது என்றும், தான் நேரில் எதையும் பார்க்கவில்லை என்றும், இதுதொடர்பாக போலீஸார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.7ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:04:54 +0530

வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.2க்கு சிகிச்சை அளித்த அ.சா.8 ஜீவரத்தினம் மருத்துவர் தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2013ஆம் தேதி உதவி மருத்துவராக பணியில் இருந்த போது மாலை 3.54 மணிக்கு திருப்பாச்சேத்தி போலீசாரால் அனுப்பப்பட்ட கோடீஸ்வரன் த/பெ .மணிஅம்பலம் என்பவரை கீழ்க்கண்ட காயங்களுக்காக பரிசோதனை செய்தேன் என்றும், அவரை 02.05.2013ஆம் தேதி அவரது ஊரில் உள்ள வல்லாளமேடு என்ற இடத்தில் வைத்து இரண்டு அடையளாம் தெரிந்த நபர்களில் ஒருவர் கம்பாலும், மற்றவர் பல்லால் கடித்து காயப்படுத்தியதாக கூறினார் என்றும், அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது என்றும், 1x1 செமீ அளவுள்ள வீக்ககாயம் வலது முன்கையின் மேல்பகுதியில் இருந்தது என்றும், 2) 1x1 செமீ அளவுள்ள வீக்ககாயம் இடது முன்கையில் இருந்தது என்றும், 3) 1/2x1/2 செமீ அளவுள்ள சிராயப்பு காயம் வலது கட்டை விரலின் உள்பகுதியில் இருந்தது என்றும் மற்றும் 1/2x1/2 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் அதே விரலின் வெளிப்புறத்தில் இருந்தது என்றும், அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கியதாகவும், தான் வழங்கிய விபத்து பதிவேடு அதசாஆ.3 என்றும், மேற் சொன்ன சம்பவத்தில் மேற்சொன்ன விதத்தில் தாக்கினால் மேற் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும், இது தொடர்பாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.9 செந்தில்குமார் காவல் சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் திருப்பாச்சேத்தி காவல்நிலையத்தில் 2013ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 02.05.2013 ஆம் தேதி துரைக்கண்ணு என்பவர் 11.15 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 110/2013 சட்டப்பிரிவுகள் 341, 323, 324, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், இந்த வழக்கின் அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயக்கண்ணு, காளை என்ற மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், இவ்வழக்கின் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகளான தண்டபாணி, தங்கப்பன், சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:05:00 +0530

பதிவு செய்ததாகவும், பார்வை மகஜர் சாட்சிகளான ஜெயக்கண்ணு, காளை என்ற மணிகண்டன் ஆகியோர்களை அன்றைய தினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான வெள்ளையம்மாளை அதே தேதியில் 14.30 மணியளவில் தூதை விலக்கு ரோட்டில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட துரைக்கண்ணுவிற்கு சிகிச்சை அளித்த மானாமதுரை அரசு மருத்துவர் ஜீவரத்தினம் அவர்களை விசாரணை செய்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்றதாகவும், இவ்வழக்கின் 1வது எதிரியான தனுஷ்கோடி முன்பிணை பெற்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை என்றும், பின்பு இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 30.11.2013 அன்று 1ம் எதிரி தனுஷ்கோடி மீது 341, 324, 506(2) இதச வின் கீழும், 2வது எதிரி வெள்ளையம்மாள் மீது 341, 323, 506(2) இதச வின் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தை வைத்தே எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க முடியும். ஆனால் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இந்த 1ம் எதிரியோ, இறந்துபோன 2ம் எதிரியோ காயம்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகளை தாக்கியதாகவோ வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையிலும், காயம்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 தனது முதல் விசாரணையிலிருந்து மாறுபட்டு, குறுக்கு விசாரணையில் சம்பவமே நடைபெறாதது போல முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியின் சாட்சியம், மருத்துவரின் சாட்சியம் மற்றும் புலன் விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்தை வைத்து மட்டுமே 1ம் எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டு விட்டதாக தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, 1ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) **முடிவாக**, 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 324, 506(ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் 1ம் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.03.16 16:05:06 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள்–16ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:05:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | துரைக்கண்ணு, நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | விஜயகோபால், காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | பூமாதேவி, காயம்பட்ட சாட்சி |
| அ.சா.4 | தண்டபாணி, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | காளை (எ) மணிகண்டன், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | ஜெயக்கண்ணு, பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | தங்கப்பா, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.8 | ஜீவரத்தினம், மருத்துவர் |
| அ.சா.9 | செந்தில்குமார், சார்பு ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2/அ.சா.6 | பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3/அ.சா.8 | விபத்து பதிவேடு |
| அ.த.சா.ஆ.4/அ.சா.9 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5/அ.சா.9 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.6/அ.சா.9 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை
எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:05:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.392/2019**
**நாள்: 16.03.2026**
**தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.**

**முடிவாக,** 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 324, 506(ii)–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் 1ம் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு எதும் பிறப்பிக்கப்படவில்லை.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:05:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்